சென்னை
செவ்வாய்
டிசம்பர் 2,
2025
மாணவர் பதிப்பு

# தினமலர்

75 பவள விழா ஆண்டு

விலை ரூ.3/-

நிறுவனர் : டி.வி. ராமசுப்பையர்
www.dinamalar.com




## பட்டம்

03 • 2026 : அசத்தப் போகும் இயற்பியல்
04 • இந்திய அரசியல் அமைப்பின் முன்னோடி சமஸ்தானம்
05 • கதைக் களம்: சவாலே சமாளி
06 • ஊடகங்களுக்கு எழுதுவது எப்படி?
07 • செவ்வாய் கிரகத்தில் இந்தியப் பெயர்கள்!
08 • நீங்களும் பாட்டு எழுதுங்கள்

## புலியைப் பிடிக்கச் சிறப்பு முயற்சி



நீலகிரி மாவட்டம், அழகான வனப்பகுதி நிறைந்தது. இந்த வனப்பகுதியில் இருந்து அவ்வப்போது வெளியே வந்த புலி ஒன்று, இந்த மாவட்டத்துக்கு உட்பட்ட தேவர்சோலை என்ற டவுன் பஞ்சாயத்து பகுதியில் கால்நடைகளை வேட்டையாடி வந்தது. அன்று வரை 13 பசுக்களைக் கொன்ற அந்தப் புலியைப் பிடிக்க வனத்துறையினர் கூண்டு வைத்தனர். அந்தக் கூண்டுக்குள் இருதினங்களுக்கு முன்பு புலி வந்து சிக்கிக் கொண்டது. அதை மயக்க ஊசி செலுத்தாமலேயே வனப்பகுதிக்குள் கொண்டு விட்டனர். இந்த முயற்சி முதன்முறையாக மேற்கொள்ளப்பட்டது.

## சொந்த வாகன பதிவு நடைமுறையில் மாற்றம்




சொந்த பயன்பாட்டுக்குப் புதிய வாகனங்களை வாங்கும்போது, அவற்றைப் பதிவுசெய்ய ஆர்.டி.ஓ. எனும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்துக்குச் செல்வது கட்டாயமாக இருந்தது. மோட்டார் வாகன புதிய சட்டத்திருத்தத்தின்படி, இந்த நடைமுறை நேற்று முதல் மாற்றப்பட்டுள்ளது. வாகனங்களை விற்பனை செய்த சம்பந்தப்பட்ட வாகன விநியோகஸ்தர்களே அதற்கான ஆவணங்களை வட்டாரப் போக்குவரத்து அலுவலரிடம் சமர்ப்பித்துவிடுவர். நம் வாகனத்துக்கான பதிவு எண், நம்முடைய அலைபேசிக்கு அனுப்பப்படும். ஆனால் வணிகப் பயன்பாட்டுக்கான வாகனங்களைப் பதிவுசெய்யும் நடைமுறையில் மாற்றம் இல்லை.

## செல்லப்பிராணிகளுக்கு உரிமம் அவசியம்

செல்லப்பிராணிகளால் பிறருக்குத் தொந்தரவு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக, பெருநகர சென்னை மாநகராட்சி ஆகஸ்ட், 2023 முதல், செல்லப்பிராணி விவரங்களைப் பதிவு செய்வதைக் கட்டாயமாக்கியது. அதன்படி, கடந்த ஞாயிறு வரை 89,691 பிராணிகளுக்கு உரிமம் கோரி மனுச் செய்யப்பட்டிருக்க, 43,644 பேருக்கு உரிமம் வழங்கப்பட்டது. அதேபோல், 726 செல்லப்பிராணிகளுக்குத் தடுப்பூசி போடப்பட்டது. மைக்ரோசிப்கள் பொருத்தப்பட்டன. உரிமம் பெறுவதற்கு வரும் 7ஆம் தேதி கடைசி நாள். இந்தத் தேதிக்குள் உரிமம் பெறவில்லை எனில், 5 ஆயிரம் ரூபாய் அபராதம் செலுத்த வேண்டியிருக்கும்.




## ஒற்றை பெற்றோர் குழந்தைகள் கணக்கெடுப்பு




அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் ஒற்றை பெற்றோரால் வளர்க்கப்படும் மாணவர், மாணவியர் பற்றிய விவரங்களை மகாராஷ்டிர மாநில அரசு சேகரிக்கிறது. 1 முதல் பிளஸ் 2 வகுப்பு வரை படிக்கும் இத்தகைய மாணவர்கள் மீது சிறப்பு கவனம் செலுத்த அந்த மாநில அரசு விரும்புகிறது. ஒற்றை பெற்றோரால் வளர்க்கப்படும் மாணவ, மாணவியரை அடையாளம் கண்டு, அவர்களுக்குக் கல்வியில் சிறப்பு பயிற்சியை அளிக்க முன்வந்துள்ளது. இந்தப் பள்ளி விவரங்களைச் சேகரிப்பதன் வாயிலாக, இடைநிற்றல், பால்ய விவாகம் உள்ளிட்ட பிரச்னைகளுக்குத் தீர்வுகாண முடியும்.

## Radiation – resistant black fungus

Nearly four decades after the Chernobyl nuclear disaster turned an entire region into an uninhabitable exclusion zone, scientists have uncovered something astonishing inside the ruins of the shattered reactor. In a place where radiation levels still pose lethal risks to humans, several species of black fungi have been found not only surviving but actually thriving by feeding on radiation itself. Experiments conducted in space have shown that a thin layer of these radiation–eating fungi can reduce harmful cosmic radiation, hinting at possible future applications in spacecraft shielding. If developed further, such biological barriers could help protect astronauts on long–duration missions to the Moon or Mars.



தினமலர் அலுவலக நேரம்: காலை 9:30 – மாலை 6:00 மணி
★ 58B, கண்ணப்பன் தெரு, சின்ன காஞ்சிபுரம்–631 501 044 - 2723 4224
★ பிளாட் எண் 66, 2வது குறுக்குத்தெரு, அய்யனார் அவென்யூ, திருவள்ளூர்–602 001 044 - 2766 3129


DINAMALAR-National Tamil Daily e-mail: dmrcni@dinamalar.in
Edited, Printed and Published by Dr.K.Ramasubbu, on behalf of Dinamalar at New Standard Press, T.V.R. House, Medavakkam, Chennai - 600 100
Administrative Office: 39, Whites Road, Chennai-600 014.
Advt e-mail: dmrae@dinamalar.in Ph 044 - 2854 0001 - 03
Joint Managing Editor Dr.R.Lakshmipathy RNI No.33618/79

பட்டம்
பொறுப்பாசிரியர்: ஆர்.வெங்கடேஷ். ஆசிரியர் குழு: ரமேஷ் வைத்யா, இ.எஸ்.லலிதாமதி, ம.பா.காந்திராமன், எஸ்.மைதிலி, எஸ்.நித்தியானந்தம்.
வடிவமைப்பு: பா.ஸ்டீபன், த.கார்த்திகேயன். ஓவியங்கள்: ஈ.பிரகாஷ்.
முகவரி : பட்டம், தினமலர், 69, திரு.வி.க. ஹைரோடு, ராயப்பேட்டை, சென்னை– 600 014.
மின்னஞ்சல் : pattam@dinamalar.in தொலைபேசி : 98410 53881.

திங்கள் முதல் வெள்ளி வரை பள்ளிகளுக்கு மொத்தமாக வரவழைக்க, சந்தா விவரங்களுக்கு
சென்னை : 98843 91342 | 99443 09681 | 97511 36644

# 2026 : அசத்தப் போகும் இயற்பியல்!


இயற்பியல் துறையில், 2026ஆம் ஆண்டில் என்னென்ன புதுமைகள் நடைபெறப் போகின்றன?









## ஸ்பின்ட்ரானிக்ஸ்

ஸ்பின்ட்ரானிக்ஸ் (Spintronics) என்பது குவான்டம் இயற்பியலை அடிப்படையாகக் கொண்ட நவீன தொழில்நுட்பம். வழக்கமான எலக்ட்ரானிக்ஸ் சாதனங்கள் எலக்ட்ரானின் மின்னூட்டத்தை (Charge) மட்டுமே பயன்படுத்துகின்றன. ஆனால், ஸ்பின்ட்ரானிக்ஸ், எலக்ட்ரானின் சுழற்சியையும் (Spin) சேர்த்து தகவல்களைச் சேமிக்கவும், கடத்தவும் பயன்படுகிறது.

**பயன்கள்:**

- வன்வட்டுகளில் (Hard Drives) மிகச்சிறிய இடத்தில் அதிக அளவு தரவுகளைச் சேமிக்க முடியும்.
- தரவு பரிமாற்றம் மிக வேகமாக இருக்கும்.
- செயல்பட மிகக் குறைந்த மின்சாரமே போதுமானது.
- மின்சாரம் துண்டிக்கப்பட்டாலும் இதில் சேமிக்கப்பட்ட தரவுகள் அழியாது. சாதனங்கள் சூடாவது வெகுவாகக் குறையும்.

**வளர்ச்சி:**

2026ஆம் ஆண்டில், கணினி நினைவகத் துறையில், குறிப்பாக, எம்ரேம் (Magnetoresistive Random Access Memory – MRAM) தொழில்நுட்பத்தில் இது பெரும் புரட்சியை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய சிலிக்கான் சிப்களுக்கு மாற்றாக, செயற்கை நுண்ணறிவு மற்றும் குவான்டம் கணினிகளின் அதிவேகச் செயல்பாட்டிற்குத் தேவையான ஆற்றல் மிக்க 'சிப்'களை (Chips) உருவாக்க ஸ்பின்ட்ரானிக்ஸ் மிக அவசியம்.

## ஃபிளாஷ் ரேடியோதெரபி

ஃபிளாஷ் ரேடியோதெரபி (FLASH Radiotherapy) என்பது புற்றுநோய் சிகிச்சையில் ஒரு புரட்சிகரமான தொழில்நுட்பம். வழக்கமான கதிர்வீச்சு சிகிச்சை அளிக்க சில நிமிடங்கள் ஆகும். ஆனால், இந்த முறையில் மிக அதிக அளவு கதிர்வீச்சை ஒரு விநாடிக்கும் குறைவான நேரத்தில் (மில்லி விநாடிகளில்) மின்னல் வேகத்தில் செலுத்துவதே இதன் தனித்துவம்!

**பயன்கள்:**

- இது புற்றுநோய் செல்களைத் திறம்பட அழிக்கும். அதேவேளையில், அருகில் உள்ள நல்ல திசுக்களுக்கு ஏற்படும் பாதிப்பை வெகுவாகக் குறைக்கும். இதை 'ஃபிளாஷ் விளைவு' (FLASH Effect) என்கின்றனர்.
- திசுக்கள் பாதுகாக்கப்படுவதால், சிகிச்சைக்குப் பின் ஏற்படும் உடல் உபாதைகள் மிகவும் குறைவு. இதனால், நோயாளிகள் மருத்துவமனையில் செலவிடும் நேரம் குறைகிறது.

**வளர்ச்சி:**

தற்போது இந்தத் தொழில்நுட்பம் பல கட்ட சோதனைகளில் உள்ளது. 2026ஆம் ஆண்டிற்குள் இது மருத்துவ ரீதியாக அங்கீகரிக்கப்பட்டு, உலகின் முன்னணி மருத்துவமனைகளில் பயன்பாட்டிற்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக, ஆழமான மற்றும் குணப்படுத்த கடினமான கட்டிகளுக்கு இது பாதுகாப்பான தீர்வாக உருவெடுக்கும். புற்றுநோயியல் (Oncology) துறையில் இது ஒரு முக்கிய மைல்கல்லாக இருக்கும்.

## ஆர்டெமிஸ் II

நாசாவின் ஆர்டெமிஸ் திட்டத்தின் கீழ், மனிதர்களை நிலவுக்கு அனுப்பும் முதல் மனிதப் பயணத் திட்டம் ஆர்டெமிஸ் II (Artemis II). 1972க்குப் பிறகு முதன்முறையாக நான்கு விண்வெளி வீரர்கள் (ஒரு பெண் உட்பட) நிலவைச் சுற்றி வந்து பூமிக்குத் திரும்புவார்கள். இவர்கள் நிலவில் தரையிறங்க மாட்டார்கள், ஆனால் அதைச் சுற்றி வருவார்கள்.

**பயன்கள்:**

- மனிதர்கள் உயிர்வாழும் வசதிகள் மற்றும் ஓரியன் (Orion) விண்கலத்தின் செயல்பாட்டை இது உறுதி செய்யும்.
- நிலவைத் தாண்டி, எதிர்காலத்தில் மனிதனைச் செவ்வாய் கிரகத்திற்கு அனுப்பும் திட்டத்திற்கு இதுவே முதல் படியாகும்.

**வளர்ச்சி:**

இந்தத் திட்டம் பிப்ரவரி அல்லது ஏப்ரலில் செயல்பட உள்ளது. இது வெற்றியடைந்தால் மட்டுமே, அடுத்து வரும் ஆர்டெமிஸ் III திட்டத்தில் மனிதர்கள் நிலவில் காலடி எடுத்து வைக்க முடியும். எனவே, 2026இல் மனித குலத்தின் விண்வெளிப் பயணக் கனவை நனவாக்கும் மிக முக்கிய நிகழ்வாக இது அமையும்.

## ஃபோட்டானிக் சிப்

வழக்கமான கணினி சிப்கள் எலக்ட்ரான்களைக் (மின்சாரம்) கொண்டு செயல்படுகின்றன. ஆனால், மின்சாரத்திற்குப் பதில் ஒளியின் துகள்களை (Photons) பயன்படுத்தி, தரவுகளைக் கடத்தும், செயலாக்கும் தொழில்நுட்பமே 'ஃபோட்டானிக் சிப்' (Photonic Chip).

**பயன்கள்:**

- ஒளியின் வேகத்தில் தரவுகள் கடத்தப்படுவதால், இவை தற்போதைய சிப்புகளை விடப் பன்மடங்கு வேகமானவை.
- மின்சாரத் தடையால் ஏற்படும் வெப்பம் இதில் மிகவும் குறைவு.
- குறைந்த மின்சாரத்தையே இது எடுத்துக்கொள்ளும்.
- 2026இல் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் உச்சத்தில் இருக்கும். தற்போதைய எலக்ட்ரானிக் சிப்களால் ஏஐயின் பிரமாண்டமான தரவுப் பரிமாற்ற வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாது. இந்த இடைவெளியை நிரப்ப 'ஃபோட்டானிக் சிப்'கள் அவசியமாகின்றன.

**வளர்ச்சி:**

கூகுள், அமேசான் போன்ற நிறுவனங்களின் டேட்டா சென்டர்களில் இவை முக்கிய பங்கு வகிக்கும். சிக்கலான ஏஐ மாடல்களை (LLMs) மிக வேகமாகப் பயிற்றுவிக்கவும், 6ஜி போன்ற அதிவேக இணையத் தொடர்புகளுக்கும் இந்தச் சிப்கள் அதிகம் பயன்படுத்தப்படும்.

மொத்தத்தில், கணினித் துறையில் ஒரு பெரிய பாய்ச்சலாக இருக்கும்.

## யூக்ளிட்

'யூக்ளிட்' என்பது ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தின் (ESA) விண்வெளித் தொலைநோக்கியைக் குறிக்கிறது.

பிரபஞ்சத்தின் மிகப்பெரிய புதிரான 'இருண்ட பிரபஞ்சத்தை' (Dark Universe) ஆய்வு செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட நவீன விண்வெளித் தொலைநோக்கி தான் இந்த யூக்ளிட். இது, ஜூலை 2023இல் விண்ணில் ஏவப்பட்டது.

**பயன்கள்:**

- கோடிக்கணக்கான விண்மீன் திரள்களை (Galaxies) படம்பிடித்து, பிரபஞ்சத்தின் மிகத் துல்லியமான முப்பரிமாண (3D) வரைபடத்தை உருவாக்கும்.
- கண்ணுக்குத் தெரியாத கரும்பொருள் (Dark Matter) மற்றும் கரும் ஆற்றல் (Dark Energy) ஆகியவை எவ்வாறு பிரபஞ்சத்தை விரிவடையச் செய்கின்றன என்பதை ஆராய இது உதவுகிறது.


**வளர்ச்சி:**

2026இல், யூக்ளிட் பூமிக்கு அனுப்பும் பிரமாண்டமான தரவுகளைக் (Big Data) கொண்டு, பிரபஞ்சம் விரிவடையும் வேகம் குறித்த புதிய கணக்கீடுகளை விஞ்ஞானிகள் வெளியிடுவார்கள்.

ஐன்ஸ்டீனின் ஈர்ப்பு விசை கோட்பாட்டை (Theory of General Relativity) சோதித்துப் பார்க்க, 2026இல் இதன் தரவுகள் மிக அவசியமானதாக இருக்கும். ஆகவே, 2026இல் பிரபஞ்சத்தின் தோற்றம் மற்றும் எதிர்காலம் பற்றிய நமது புரிதலை மாற்றியமைக்க யூக்ளிட் முக்கிய பங்கு வகிக்கும்.

– பெர்ஜின்

# பயோ- சென்சார்கள்




பயோசென்சார்கள் என்பவை உயிரியல் மாற்றத்தை மின் சமிக்ஞையாக (Signal) மாற்றக்கூடிய பகுப்பாய்வு கருவிகளாகும். இதில், நொதிகள், ஆன்டிபாடிகள் போன்ற உயிரியல் கூறுகளும், மாற்றத்தை உணரும் ட்ரான்ஸ்டியூசரும் (Transducer) இணைக்கப்பட்டிருக்கும். சர்க்கரை நோயாளிகள் பயன்படுத்தும் 'குளுக்கோமீட்டர்' ஓர் எளிய பயோ சென்சாராகும்.

**பயன்கள்:**

- ரத்த சர்க்கரை அளவு, கொலஸ்ட்ரால், புற்றுநோய் செல்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிய உதவும்.
- நீர், காற்றில் உள்ள நச்சுத்தன்மை, மாசுகளைக் கண்டறியப் பயன்படும்.

**வளர்ச்சி:**

2026ஆம் ஆண்டில், ஏ.ஐ., நானோ தொழில்நுட்பத்துடன் இணைந்த பயோசென்சார்கள் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும். தோலில் ஒட்டிக்கொள்ளும் வகையிலான சென்சார்கள் மூலம், உடல்நலத்தை 24 மணி நேரமும் கண்காணிக்க முடியும்.

# இந்திய அரசியல் அமைப்பின் முன்னோடி சமஸ்தானம்

இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1950ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. இதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே, ராஜஸ்தானில் உள்ள பிகானேர் சமஸ்தானம், ஜனநாயக முறைப்படி ஆட்சி செய்வதில் இந்தியாவிற்கே வழிகாட்டியாக இருந்துள்ளது.

1913ஆம் ஆண்டு, பிகானேர் சட்டப்பேரவை (Bikaner Legislative Assembly) தொடங்கப்பட்டது. அதை உருவாக்கியவர், மகாராஜா கங்கா சிங் (Ganga Singh). ராஜஸ்தானில் அமைக்கப்பட்ட முதல் சட்டப்பேரவை இது.

பிகானேர் பேரவையில் 35 உறுப்பினர்கள் இருந்தார்கள். இவர்கள் சமூகத்தின் பல்வேறு பிரிவுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்திய அரசு 2009இல் தான் 'கல்வி உரிமைச் சட்டத்தை' (RTE) கொண்டு வந்தது. ஆனால், பிகானேர் அரசு 1929 லேயே அனைவருக்கும் கல்வி எனும் சட்டத்தைக் கொண்டு வந்துவிட்டது. அந்தச் சமஸ்தானத்தில் வசிக்கும் அனைத்துக் குழந்தைகளுக்கும் ஆரம்பக் கல்வி கட்டாயம் என்று வலியுறுத்தியது.


கங்கா சிங்

ஒவ்வொரு குழந்தைக்கும் எழுத, படிக்க, அடிப்படை கணிதம் தெரிந்திருக்க வேண்டும் என்பதே இதன் நோக்கம். இதற்காகப் புதிய பள்ளிகள் திறக்கப்பட்டு, அதற்கு இயக்குநரும் நியமிக்கப்பட்டார்.

சட்டப்பேரவை மக்கள் பிரச்னைகளைத் தீவிரமாக விவாதித்தது. ஹிந்தி மொழி ஆட்சி மொழியாக ஏற்கப்பட்டது. எல்லைப் பகுதிகளில் நடக்கும் குற்றங்கள், நீர் விநியோகம் (Water distribution), விலங்குகள் பாதுகாப்பு போன்றவை விவாதிக்கப்பட்டன.

1928இல் இந்துத் திருமணச் சட்டம் 1939இல் உணவு கலப்படத் தடுப்புச் சட்டம் போன்றவை இயற்றப்பட்டன.

**பிற மாநிலங்களுக்கு வழிகாட்டி:**

பிகானேர் சட்டப்பேரவையின் செயல்பாட்டைக் கண்டு, ஜோத்பூர் (1940), ஜெய்ப்பூர் (1944) போன்ற சமஸ்தானங்களும் இதே முறையைப் பின்பற்றின.

1949இல் பிகானேர், சுதந்திர இந்தியாவுடன் இணைந்த பிறகு, அங்கு செயல்பட்டு வந்த சட்டப்பேரவை கலைக்கப்பட்டது. அந்தப் பழைய சட்டப்பேரவைக் கட்டடம், பின்னர் கல்வித் துறை அலுவலகமாக மாற்றப்பட்டது. இது பிகானேர் கல்விக்கு அளித்த முக்கியத்துவத்தைக் காட்டுகிறது.

கல்வி என்ற சிந்தனை, சுதந்திரத்திற்கு முன்பே நம் இந்திய மன்னர்களிடம் இருந்துள்ளது என்பதற்கு, பிகானேர் மன்னர் கங்கா சிங் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

### கங்கை கால்வாய்

*ராஜஸ்தான் என்றாலே பாலைவனம். அங்கே எப்படி விவசாயம் செழித்தது?*

பஞ்சாப் நதிகளிலிருந்து தண்ணீரைப் பாலைவனத்திற்குக் கொண்டு வர, 1927லேயே இவர் 'கங்கை கால்வாய்' என்ற உலகின் மிக நீண்ட 'கான்கிரீட்' கால்வாயைக் கட்டினார். அதனால்தான் அந்தப் பாலைவனம் சோலையாக மாறியது. இவரை 'நவீன இந்தியாவின் பகீரதன்' என்றும் அழைப்பார்கள்."

### ஒட்டகப் படை

உலகிலேயே ஒட்டகங்களை வைத்துப் போரிடும் ராணுவப் படை [Bikaner Camel Corps] இவரிடம்தான் இருந்தது. முதல், இரண்டாம் உலகப் போர்களில், எகிப்து பாலைவனங்களில் இந்தப் படை ஆங்கிலேயர்களுக்குப் பெரும் வெற்றியைத் தேடித்தந்தது.

### ரயில்வே

அந்தக் காலத்திலேயே பிகானேர் சமஸ்தானத்திற்கு என்று தனி 'ரயில்வே துறை' [Bikaner State Railway] இருந்தது. மக்களுக்கான போக்குவரத்தை மிகக் குறைந்த கட்டணத்தில் இவர் அமைத்துக் கொடுத்தார்.


வெர்சாய்லஸ் ஒப்பந்தம்

முதல் உலகப்போரில் கங்கா சிங் பங்கேற்றுள்ளார். அப்போது ஆட்சியில் இருந்த ஆங்கிலேயர்களின் சார்பாக இந்தப் போரில் கலந்து கொண்டார். போரை முடிவுக்குக் கொண்டுவரும் சமாதானப் பேச்சு வார்த்தையிலும் இவர் கலந்து கொண்டார். பிரான்சில் உள்ள வெர்சாய்லஸ் [Versailles] அரண்மனையில் உள்ள கண்ணாடி மாளிகையில் உலகப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு, அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்களில் கங்கா சிங்கும் ஒருவர். ஜூன் 28, 1919 அன்று போர் நிறுத்தம் செய்வதற்காக, உலக நாடுகளின் பிரதிநிதிகள் கையெழுத்திட்டனர்.

### வட்ட மேசை மாநாடுகளில் பங்கேற்பு

பிகானேர் மகாராஜா கங்கா சிங், 1930, 1931ஆம் ஆண்டுகளில் லண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்டார். இந்தியாவிற்கு விடுதலை கொடுப்பது தொடர்பாக இந்த மாநாடுகள் நடந்தன. காந்தி உட்பட இந்தியப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அதில் சுதேச சமஸ்தானங்களின் சார்பில் இவர் கலந்து கொண்டார்.

பிரிட்டிஷ் இந்தியாவின் பகுதிகளையும் சுதேச சமஸ்தானங்களையும் ஒன்றிணைக்கும் ஒரு கூட்டாட்சி [Federation] அமைப்பை உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். மகாத்மா காந்தி இந்தக் கருத்தை எதிர்த்தார். இது இந்தியாவின் சுதந்திரத்தைப் பாதிக்கும் என்றார்.




### விக்டோரியா நாணயங்கள் வெளியீடு

பிகானேர் சமஸ்தானம் சார்பாக நாணயங்களை வெளியிட்டார் காங்கா சிங். அந்த நாணயங்களில் அப்போதைய ஆட்சியாளரான இங்கிலாந்து ராணி விக்டோரியாவின் உருவம் ஒருபக்கம் பொறிக்கப்பட்டிருந்தது. மறுபக்கம் பிகானேர் சின்னங்கள் இடம்பெற்றிருந்தன. நாணயங்கள் சமஸ்தானதின் உள்ளூர் பயன்பாட்டிற்காகப் வெளியிடப்பட்டன.

## வரலாற்று ஆய்வுக்குப் பாதை அமைத்தவர்

மா. இராசமாணிக்கனார் (1906–1965) தமிழ் வரலாற்று ஆய்வின் போக்கையே மாற்றியமைத்த ஒரு முன்னோடி. வெறும் தகவல்களைச் சேகரிக்கும் வரலாற்று ஆசிரியராக இல்லாமல், கிடைத்த தரவுகளை அறிவியல் பூர்வமாக ஆராய்ந்து, தமிழக வரலாற்றைப் புரிந்துகொள்ள ஒரு பாதையை வகுத்தவர். இவரது ஆய்வுகள், தமிழர்களின் தொன்மையான வரலாற்றையும் பண்பாட்டையும் வரையறை செய்ய உதவின.

**அறிவியல் அணுகுமுறை**

இராசமாணிக்கனார் வாழ்ந்த காலத்தில், தமிழக வரலாற்று ஆய்வுகள் பெரும்பாலும் நம்பிக்கைகள், புராணக் கதைகள், மிகைப்படுத்தப்பட்ட புகழுரைகளைச் சார்ந்து அமைந்திருந்தன. அதிலிருந்துவிலகி, திடமான ஆதாரங்களின் அடிப்படையில் வரலாற்றை அணுகும் முறையை அறிமுகப்படுத்தினார். ஆய்வுகளுக்குக் கல்வெட்டுகள், செப்பேடுகள், நாணயங்கள், சங்க இலக்கியங்கள், அயல்நாட்டவர் குறிப்புகளை முதன்மை ஆதாரங்களாக எடுத்துக்கொண்டார்.

**அவர் எழுதிய சில நூல்கள்**

பல்லவர் வரலாறு: இது பல்லவர் கால வரலாற்றை முழுமையாக ஆராயும் ஒரு விரிவான ஆவணம். அரசியல், சமூகம், பொருளாதாரம், கலை, பண்பாடு எனப் பல்லவர் காலத்தின் அனைத்து அம்சங்களையும் ஆதாரங்களுடன் விவரித்துள்ளார்.

காலம்: 1907–1967

பெரிய புராண ஆராய்ச்சி: சேக்கிழார் எழுதிய 'பெரிய புராணம்' ஒரு பக்தி இலக்கியம் என்றாலும், அதில் பொதிந்துள்ள வரலாற்றுச் செய்திகள், புவியியல் குறிப்புகள், சமூகத் தகவல்கள் ஆகியவற்றை அவர் ஒரு வரலாற்று அறிஞரின் பார்வையோடு அணுகினார். நிகழ்வுகளைக் கால வரிசைப்படுத்தியும், வெவ்வேறு ஆதாரங்களுடன் ஒப்பிட்டும், புராணத்தில் உள்ள வரலாற்று உண்மைகளை வெளிக்கொணர்ந்தார்.




தமிழர் நாகரிகம்: தமிழர் நாகரிகத்தின் சிறப்பம்சங்கள், அவர்களின் சமய நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள் போன்றவற்றை ஆதாரங்களுடன் விளக்கியுள்ளார்.

சேரர் வரலாறு–சோழர் வரலாறு: சங்க காலம் முதல் பிற்காலம் வரையிலான சேர, சோழ மன்னர்களின் வரலாற்றை, இலக்கிய, கல்வெட்டுச் சான்றுகளுடன் தொகுத்து வழங்கினார். இந்த ஆய்வுகள், தமிழகத்தின் மூன்று பெரும் அரச மரபுகளைப் பற்றிய தெளிவான சித்திரத்தை உருவாக்க உதவின.

தமிழ், தமிழர் வரலாறு குறித்த தெளிவைத் தமிழ் சமூகத்தில் ஏற்படுத்துவதில் இவரின் நூல்கள் முக்கிய பங்காற்றின.

# சவாலே சமாளி

ஆர்.சி.மதிராஜ்

பரிதியின் அம்மா ஓர் ஓவிய ஆசிரியர். பரிதிக்கு அம்மாதான் சிறந்த வழிகாட்டி, ஆசிரியை எல்லாம். அம்மாவும் பிள்ளையும் அவ்வப்போது அவர்களுக்குள்ளேயே சவால் விடுத்து பரிசும் கொடுத்துக்கொள்வார்கள். "ஒரு வேலையை முடிக்க குறிப்பிட்ட நேரத்தை நிர்ணயம் செய்துவிட்டால், நம்முடைய புத்தி இன்னும் ஷார்ப்பாகவும் கூர்மையாகவும் வேலை செய்யும்." என்பார் அம்மா. அவ்வப்போது இப்படி வீட்டுக்குள்ளேயே அவர்களுக்குள் பயிற்சியும் நடக்கும்.

அன்று காலை, ஒரு புதிய சவாலுடன் வந்தான் பரிதி. "அம்மா! இன்றைக்கு நான் உங்களுக்கு ஒரு போட்டி வைக்கிறேன். நம்முடைய வீட்டை நினைவு படுத்துவதுபோல ஓர் ஓவியத்தை, சரியாகப் பத்து நிமிடங்களுக்குள் வரைந்து காட்ட வேண்டும். ஓக்கேவா?'' என்றான்.

அம்மா புன்னகைத்தார். கடிகாரத்தின் முட்கள் ஓட ஆரம்பித்தன.

அம்மா ஒரு பேப்பரை எடுத்து, வீட்டிற்குள் இருக்கும் புத்தக அலமாரி மற்றும் அதன் பக்கத்தில் இருந்த வாசிப்பு நாற்காலியை மட்டும் வேகமாக வரைந்தார். பத்து நிமிடங்களுக்குள் ஓவியம் தயாராகிவிட்டது.

"ஆஹா, அம்மா! முழு வீடு வரைவதற்கு இத்தனை நேரம் ஆகாது. ஆனால், இவ்வளவு துல்லியமான ஒரு பகுதியைக் குறுகிய நேரத்துக்குள் எப்படி முடித்தீர்கள்?" பரிதி ஆச்சரியத்துடன் கேட்டான்.

"இதுவும் ஒரு பயிற்சிதான் பரிதி. நான் யூடியூபில் ஓவியம் வரையும் வீடியோக்களைப் பார்ப்பேன். அதில், ஒரு நிமிடத்தில் ஒரு ரஃப் ஸ்கெட்ச் வரைவது, பின்பு ஐந்து நிமிடத்தில் அதை மெருகேற்றுவது என்று டைமர் செட் செய்து பயிற்சி அளிப்பார்கள். அந்த உத்தியைப் பயன்படுத்தித்தான் இந்த ஓவியத்தை வரைந்தேன்."

பரிதி அம்மாவின் புத்திசாலித்தனத்தைப் பாராட்டினான். ''அதெல்லாம் சரி... என் பரிசு எங்கே?'' என்று அம்மா கேட்டதற்கு, கன்னத்தில் முத்தமிட்டு கழுத்தைக் கட்டிக்கொண்டு ''இதுதான் என் பரிசு'' என்றான்.

.......

மறுநாள், அம்மா பரிதிக்கு ஒரு சவால் வைத்தார்.

''இன்று உனக்குச் சவால்!''

''சவாலா? சரி. ஓக்கே. ஆனால் நேற்று நான் தந்த பரிசையே எனக்குத் தரக்கூடாது'' என்று சிரித்தான் பரிதி.

அம்மாவும் சிரித்தபடி, ஒரு புதிய சாக்லேட் ஜாடியை எடுத்தார். ''இது உனக்காகத்தான் வாங்கி வைத்திருக்கிறேன். ஆனா அவ்வளவு ஈசியா தரமாட்டேன். ஒரு போட்டி வைக்கிறேன் அதில் ஜெயிச்சா சாக்லேட்ஸ் உனக்குதான்''. என்றார்.

சாக்லேட் ஜாடியில் ஒரு பூட்டைப் பூட்டினார். சாக்லேட் ஜாடியின் சாவியை, சமையலறை அலமாரியின் மேல் அடுக்கில் வைத்தார். அலமாரியைப் பூட்டி அதன் சாவியை, சமையலறை மேஜை மீது, பெரிய சில்வர் பாத்திரத்திற்கு அடியில் மறைத்து வைத்தார்.

"நான் குளித்துவிட்டு வெளியே வர அரை மணி நேரம் ஆகும். சரியாக 30 நிமிடங்களுக்குள், ஜாடியைத் திறக்க முடிந்தால்... ஜாடி முழுவதும் உள்ள சாக்லேட்கள் உனக்குத்தான்!" என்றபடியே கிளம்பினார்.

பரிதி, அம்மா பாத்திரத்திற்கு அடியில் வைத்திருந்த முதல் சாவியை எடுக்கப் பாய்ந்தான். அவசரத்தில் சில்வர் பாத்திரத்தை நகர்த்தியபோது, உள்ளே இருந்த கடலை மாவு டப்பா கவிழ்ந்து, மாவுத் தூள் ஒரு மேகம் போல பரிதியின் முகம் முழுவதும் கொட்டியது.

(ஐந்து நிமிடங்கள் அதில் கழிந்தன.)

ஓர் உதறு உதறிக்கொண்டு முகத்தைத் துடைத்தபடி சாவியை எடுத்தான் பரிதி.

சாவியால் அலமாரியைத் திறந்தான். அடுத்து சாக்லேட் டப்பாவின் சாவி. அது எட்டாத உயரத்தில் இருந்தது. நாற்காலியை இழுத்து அருகில் போட்டும் எட்டவில்லை.

(மேலும் ஐந்து நிமிடங்கள் கழிந்தன.)

தன் அறையிலிருந்து ஒரு மீன்பிடி நூலையும், நூலின் நுனியில் ஒரு சிறு ஊக்கையும் வளைத்துக் கட்டி, தூக்கிப்போட்டு சாவியை இழுக்க முயன்றான். முயற்சி தோல்வி.

(மேலும் பத்து நிமிடங்கள் வீணாகிப் போனது)

லேசான பதற்றம் எட்டிப்பார்த்தது. திடீரென்று அவனுக்குள் மின்னல் போல ஒரு யோசனை தோன்றியது.

தன் பொம்மை ரயிலின் பெட்டிகளை ஈர்க்கும் ஒரு சிறு காந்தத்தை எடுத்து, மீன்பிடி நூலின் நுனியில் இறுக்கிக் கட்டினான். நாற்காலியில் பொறுமையாக ஏறி காந்தத்தை மேல் அடுக்கு நோக்கி வீசினான். நிதானமாகக் கயிற்றை அசைக்க அசைக்க.... அவன் எதிர்பார்த்தது போலவே, காந்தம் சாவியின் இரும்புத் தலைப்பகுதியை ஈர்த்தது!

பரிதி மெதுவாக நூலை இழுக்க, 'கிளிங்' என்ற சத்தத்துடன் சாவி கீழே விழுந்தது.

சரியாக 25வது நிமிடத்தில், சாக்லேட் ஜாடியின் பூட்டைத் திறந்து, ஒரு சாக்லேட்டை எடுத்து வாயில் போட்டான்.

அதே நேரம்... குளியலறைக் கதவு திறந்து அம்மா வெளியே வந்தார்.

பரிதி சாக்லேட்டை மென்றவாறே, "சவால் முடிந்தது, அம்மா!" என்றான்.

அம்மா ஜாடியைப் பார்த்தார். பிறகு, பரிதியின் முகத்தைப் பார்த்தார். கடலை மாவு பூசிய வெள்ளை முகம்!

அம்மா குறும்பாக, பரிதியின் கன்னத்தைத் தொட்டு, "என்னடா இது பரிதி? சவாலில் ஜெயித்த சந்தோஷத்தில் உன் முகத்துக்கு நீயே 'ஃபேஷியல்' பண்ணிக்கிட்டாயா? இல்ல, சாக்லேட் பரிசு கிடைக்கலைன்னா, 'மாவுச் சண்டை' போடத் தயாரா இருந்தியா?" என்றார்.

பரிதி தன் குறும்பு முகம் முழுவதும் சிரிப்பைக் காட்டினான்.



# ஊடகங்களுக்கு எழுதுவது எப்படி?


ஊடகங்களில் நீங்கள் படிக்கும் செய்திகள், விளம்பரங்கள், கட்டுரைகள் எல்லாவற்றையும் எழுதுவதற்கு, சில முக்கியமான திறமைகள் தேவை. ஏனென்றால், இந்த எழுத்துகள் பல கோடி மக்களைச் சென்றடைய வேண்டும். உடனடியாக அவர்களின் கவனத்தை ஈர்க்க வேண்டும். எனவே, ஒரு சிறந்த ஊடக எழுத்தாளராக, தெரிந்துகொள்ள வேண்டிய முக்கியமான திறன்கள் உள்ளன.

### 1 தெளிவும் சுருக்கமும்

- ஒரு செய்தியைச் சொல்லும்போது, அது உடனே புரிய வேண்டும். தேவையற்ற வார்த்தைகள் இருக்கக்கூடாது.
- முக்கியமான விஷயத்தை முதலில் சொல்ல வேண்டும். சுற்றி வளைத்துப் பேசக்கூடாது.
- எல்லாருக்கும் புரியக்கூடிய, எளிமையான சொற்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும். குழப்பமான வார்த்தைகளைத் தவிர்க்க வேண்டும்.
- வாக்கியங்கள் சுருக்கமாகவும், படிக்கச் சுலபமாகவும் இருக்க வேண்டும்.
- செய்தி எழுதும்போது, ஒரு பத்தியில் ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்கள் மட்டுமே இருப்பது நல்லது.
- உங்கள் எழுத்து எந்த ஊடகத்திற்குச் செல்கிறது என்பதைப் பொறுத்து, எழுத்துநடை இருக்க வேண்டும்.

### 2 உண்மை மற்றும் நம்பகத்தன்மை

ஊடகங்களின் மிகப்பெரிய பலமே, நம்பகத்தன்மைதான். எழுதும் ஒவ்வொரு தகவலும், எண்ணும், மேற்கோளும் உண்மையாக இருக்கிறதா என்று முதலில் சரிபார்க்க வேண்டும். எங்கிருந்து தகவலைப் பெற்றீர்கள் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.




### 3 எழுத்தின் அமைப்பு

ஊடகங்களில் எழுதுவதற்குச் சில பிரத்யேக வடிவங்கள் உள்ளன. முதலில், மிக மிக முக்கியமான விஷயங்கள் (யார், என்ன, எங்கே, எப்போது, ஏன், எப்படி) இருக்க வேண்டும். அதன்பின், முக்கியமான துணை விவரங்கள் மற்றும் தகவல்கள் இருக்க வேண்டும். கடைசியில், குறைவான முக்கியத்துவம் உள்ள தகவல்கள் இருக்க வேண்டும். இதன்மூலம், படிப்பவர் முதல் வரியை மட்டும் படித்தாலும் கூட முக்கிய செய்தியைத் தெரிந்துகொள்ள முடியும். உங்கள் தலைப்பு, மக்களை உடனடியாகக் கவர்ந்து, அந்தக் கட்டுரையை முழுவதும் படிக்கத் தூண்ட வேண்டும்.

### 4 சட்டம் மற்றும் விதிகள்

ஓர் ஊடக எழுத்தாளர், சில சட்ட விதிகளையும் தெரிந்துகொள்ள வேண்டும். அதாவது, தனிப்பட்ட நபர்களின் ரகசியங்களைப் பாதுகாக்க வேண்டும். தவறான வதந்திகளைப் பரப்புதல் கூடாது. மற்றவர்களின் எழுத்துகளைத் திருடி வெளியிடக் கூடாது. ஒருவரைப் பற்றி அவதூறாக எழுதக்கூடாது.

மாணவர்களே! நீங்கள் பள்ளி இதழ்களுக்கு அல்லது பள்ளியின் இணையதளத்திற்கு எழுத முயலும்போதும், இந்தத் திறன்கள் உங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

# டிஜிட்டல் ஆரோக்கியம்: ஸ்மார்ட்டாகச் செயல்படுவோம்!

இன்றைய உலகில், இணையத்திலும், ஃபோனிலும் நாம் செலவிடும் நேரமும் முக்கியமானதாகிவிட்டது. ஆனால், இந்தச் சாதனங்களை நாம் சரியாகவும், கட்டுப்பாட்டுடனும் பயன்படுத்தவில்லை என்றால், அவை நமது ஆரோக்கியத்தைப் பாதிக்கக்கூடும்.

இதிலிருந்து நாம் எப்படித் தற்காத்துக்கொள்வது?

**1. மனமும் உணர்ச்சிகளும்**

**சவால்:** சமூக ஊடகங்களில் மற்றவர்களுடன் நம்மை ஒப்பிட்டுப் பார்ப்பது, இடைவிடாமல் வரும் அறிவிப்புகள் மற்றும் தேவையற்ற செய்திகளைப் பார்ப்பது ஆகியவை நமக்குக் கவலை, மன அழுத்தம் மற்றும் சோர்வைக் கொடுக்கலாம்.

**இலக்கு:** நாம் ஃபோனை எடுக்கும்போது, அது நம்மைச் சந்தோஷப்படுத்தவும், புத்துணர்ச்சி பெறவும், புதியதைக் கற்றுக்கொள்ளவும் மட்டுமே உதவ வேண்டும். மற்றவர்களைப் பார்த்து பொறாமைப்படவோ, வருத்தப்படவோ கூடாது.

**2. உடல் ஆரோக்கியம்:**

**சவால்:** அதிக நேரம் உட்கார்ந்தே இருப்பது, இரவில் தூங்குவதற்கு முன் ஃபோன் பார்ப்பதால் தூக்கம் கெடுவது, நீல ஒளியால் ஏற்படும் கண் சோர்வு, கழுத்து மற்றும் முதுகு வலி போன்றவை உருவாகலாம்.



**இலக்கு:** நாம் தினமும் ஓடியாடி விளையாடுவது எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம், திரையைப் பார்க்கும்போது சரியான இடைவேளை எடுப்பதும், சரியான தோரணையில் உட்காருவதும். தூங்குவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன், போனை அணைத்துவிட வேண்டும்.

டிஜிட்டல் குடியுரிமை 8

**3. நட்பு மற்றும் உறவுகள்:**

**சவால்:** அருகில் உள்ள நம் நண்பர்கள், பெற்றோர் அல்லது உறவினர்களுடன் பேசாமல், ஃபோனை மட்டுமே பார்த்துக்கொண்டு இருப்பது, உறவுகளைப் பலவீனப்படுத்தும். எப்போதும் ஆன்லைனில் இருந்தாலும், தனிமையாய் இருப்பது போல உணர வைக்கும்.

**இலக்கு:** நேருக்கு நேர் பேசுவதற்கும், சிரிப்பதற்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஆன்லைன் பேச்சு என்பது, உங்கள் உண்மையான நட்பை இன்னும் பலப்படுத்த மட்டுமே உதவ வேண்டும்.

**4. கவனம் மற்றும் படிப்பு:**

**சவால்:** முக்கியமான வேலைகளைச் செய்யும்போது அல்லது படிக்கும்போது, அடிக்கடி வரும் அறிவிப்புகள் நம் கவனத்தைச் சிதைத்து, வேலையை முடிக்க முடியாமல் தடுக்கும்.

**இலக்கு:** ஃபோனைப் பயன்படுத்துவது, நம் வேலையை விரைவாகவும் சிறப்பாகவும் முடிக்க உதவ வேண்டும். படிக்கும் நேரத்தையும், விளையாடும் நேரத்தையும் தெளிவாகப் பிரித்துக்கொள்ள வேண்டும்.

**டிஜிட்டல் சாதனங்களை நாம் கட்டுப்படுத்துவதற்கான சில எளிய உத்திகள்:**

- உணவு நேரம், படுக்கையறை மற்றும் குடும்பத்துடன் பேசும் நேரம் ஆகியவை, ஃபோனுக்கு இல்லை என்று விதிகளை உருவாக்குங்கள்.
- தூங்குவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன் ஃபோனை அணைத்து, அதை படுக்கைக்கு வெளியே வையுங்கள்.
- தேவையில்லாத எல்லா செயலிகளின் அறிவிப்புகளையும் அணைத்து விடுங்கள். மிக மிக முக்கியமான அழைப்புகளை மட்டுமே, ஃபோன் உங்களுக்குத் தெரிவிக்கட்டும்.
- நீங்கள் ஃபோனை எடுப்பதற்கு முன், 'இப்போது நான் எதற்காக ஃபோனைப் பார்க்கிறேன்?' என்று உங்களையே கேட்டுக்கொள்ளுங்கள். இதனால், தேவையில்லாமல் நேரத்தை வீணடிப்பதைத் தவிர்க்கலாம்.

# செவ்வாய் கிரகத்தில் இந்தியப் பெயர்கள்!

செவ்வாய் கிரகத்தில் உள்ள பள்ளங்களுக்கும், பள்ளத்தாக்குகளுக்கும் கேரள மாநிலத்தில் அமைந்துள்ள முக்கியமான ஊர்களின் பெயர்களைச் சூட்டுவதற்குச் 'சர்வதேச வானியல் ஒன்றியம்' (IAU – International Astronomical Union) அதிகாரப்பூர்வ ஒப்புதல் அளித்துள்ளது.



வற்கலா கடற்கரையும் செவ்வாய் கிரகமும்

**தஞ்சாவூர் டூ செவ்வாய் கிரகம்**

செவ்வாய் கிரகத்தில் உள்ள 'சாந்தே டெர்ரா' (Xanthe terra) என்ற பகுதியில், கிட்டத்தட்ட 350 கோடி ஆண்டுகள் பழைமையான, 70 கி.மீ. அகலமுள்ள பிரமாண்டமான விண்கல் பள்ளம் ஒன்று உள்ளது. இதற்கு நமது தஞ்சாவூரில் 1898இல் பிறந்த எம்.எஸ்.கிருஷ்ணின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்தியப் புவியியல் ஆய்வு மையத்தின் முதல் இந்திய இயக்குநரான இவர், இந்தியப் புவியியலுக்கு ஆற்றிய பங்கைக் கௌரவிக்கும் விதமாக, மறைந்த விஞ்ஞானிகளின் பெயர்களைப் பெரிய பள்ளங்களுக்குச் சூட்டும் விதியின் கீழ் இந்தப் பெயர் வழங்கப்பட்டுள்ளது.

**ஊர்ப் பெயர்களும் காரணங்களும்**

இந்தப் பெயர்கள் அழகிற்காக வைக்கப்படவில்லை. ஒவ்வொன்றுக்கும் ஒரு சுவாரசியமான காரணம் இருக்கிறது.

- **தும்பா –** 1960களில் இந்தியாவின் விண்வெளிக் கனவு துளிர்த்த இடம்.
- **வலியமலா –** விண்வெளி ஆய்வாளர்களை உருவாக்கும் 'இந்திய விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் (IIST)' அமைந்துள்ள இடம்.
- **வற்கலா கடற்கரை –** செவ்வாய் கிரகத்தின் பாறை அமைப்பை ஒத்துள்ளது.
- **பேக்கல் –** கேரளத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க கோட்டை.
- **பெரியார் –** கேரளத்தின் முக்கியமான நதி.

எம்.எஸ். கிருஷ்ணன் பள்ளம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் பண்டைய காலத்தில் பனிக்கட்டிகள் இருந்ததாகவும், நீர் ஓடியதாகவும் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அந்த நீர் ஓடிய பாதையைத்தான் இப்போது 'பெரியார் வேலிஸ்' (Periyar valleys) என்று அழைக்கின்றனர்.

**விடாமுயற்சிக்குக் கிடைத்த வெற்றி**

பெயர்சூட்டும் இந்த முயற்சிக்குக் காரணமான ஆராய்ச்சியாளர்கள் 'ஆசிப் இக்பால்' மற்றும் 'ராஜேஷ்.'

சர்வதேச அளவில் ஒரு கிரகத்தின் குறிப்பிட்ட பகுதிகளுக்குப் பெயர் வைப்பது சாதாரண விஷயம் அல்ல. உச்சரிப்பு சரியில்லை என்றும், விதிமுறைகள் பொருந்தவில்லை என்றும் ஆரம்பத்தில் இவர்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

ஆனால், விடாமுயற்சியுடன் போராடி, மக்கள்தொகை 1 லட்சத்திற்கும் குறைவாக உள்ள சிறிய நகரங்களின் பெயர்களைச் சிறிய பள்ளங்களுக்குச் சூட்டலாம் என்ற விதியைப் பயன்படுத்தி இவர்கள் வெற்றிகண்டுள்ளனர்.

இனி யாராவது உங்களிடம் 'வற்கலா எங்கே இருக்கிறது?' என்று கேட்டால், கேரளத்தில் இருக்கிறது என்று மட்டும் சொல்லிவிடாதீர்கள். அது 'செவ்வாய் கிரகத்திலும் இருக்கிறது' என்று கெத்தாகச் சொல்லுங்கள்.

# இயற்கையின் இன்ப ஊற்று!



காங்கோ நதி



சாம்பேஷி ஆறு

**காங்கோ நதியின் புவியியல் அமைப்பு**

காங்கோ நதி மட்டுமே பூமத்திய ரேகையை இரண்டு முறை கடக்கும் உலகின் ஒரே பெரிய நதி. இது கிழக்கு ஆப்பிரிக்க மலை முகடுகளிலிருந்து உருவாகிறது. 'சாம்பேஷி' இந்த நதியின் மிக நீளமான கிளை ஆறு. இது சாம்பியாவில் உருவாகிறது. முதலில், பூமத்திய ரேகையைக் கடந்து, வடக்கு அரைக்கோளத்தில் நுழைகிறது. மத்திய மழைக்காடுகள் வழியாகத் தெற்கு அரைக்கோளத்தில் நுழைந்து, அட்லான்டிக் பெருங்கடலில் கலக்கிறது. இவ்வாறு, இந்த நதியின் ஆற்றுப்படுகை பூமத்திய ரேகையை இருமுறை கடந்து உலகின் நீண்ட வலையமைப்பை உருவாக்குகிறது. உலகில் வேறு எந்த நதியும் பூமியின் மையக் கோட்டின் குறுக்கே இப்படி ஒரு வியத்தகு சுழற்சியைக் கொண்டிருக்கவில்லை.

**இயற்கையின் சொர்க்கம்**

காங்கோ ஆற்றுப்படுகை உலகின் இரண்டாவது மிகப்பெரிய வெப்பமண்டல மழைக்காடுகளின் தாயாகும். இந்த நதியின் பிரமாண்டமான வடிகால் பகுதி ஒன்பது நாடுகளின் சிறு சிறு பகுதிகளை உள்ளடக்கியது. மழைக்காடுகள் இந்தப் பகுதியைப் பசுமையாகவும், ஈரப்பதமாகவும், உயிரினப்பன்மை செறிந்ததாகவும் ஆக்குகிறது. காங்கோ நதி பூமத்திய ரேகையை இரண்டு முறை கடப்பதால், ஆற்றுப்படுகையின் ஒரு பகுதியாவது எப்போதும் மழையைப் பெறுகிறது. அதன் அடர்ந்த காடுகள், எண்ணற்ற தாவரங்களுக்கும், விலங்குகளுக்கும் வாழிடமாக உள்ளது.

**உலகின் ஆழமான நதி**

இது உலகின் ஆழமான நதியாகவும் உள்ளது. இதன் ஆழம் 720 அடிக்கும் அதிகம். 125 மைல் அளவிற்கு ஆழமான பள்ளத்தாக்கை உருவாக்கியுள்ளது. இது கடலுக்குள் நீண்டு, அதிக அளவு கனிமங்களையும், ஊட்டச்சத்துக்களையும் தனக்குள் கொண்டுள்ளது.

**உயர்ந்த நாகரிகத்தின் தொட்டில்**

காங்கோ சமவெளி ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மனித நாகரிகத்தின் சின்னமாக உள்ளது. இரண்டு தேசிய தலைநகரங்களான 'கின்ஷாசா', 'பிரஸ்ஸாவில்' ஆகியவை அவற்றின் கரைகளில் நேர் எதிரே அமைந்துள்ளன. இவை உலகின் அதிக நெருக்கமான தலைநகரங்கள். போக்குவரத்து, விவசாயம், மீன்பிடித்தல் போன்ற தொழில்களைச் சார்ந்திருக்கும் கோடிக்கணக்கான மக்களுக்கு ஓர் உயிர்நாடியாகவும் விளங்குகிறது. தொலைதூர சமூகங்களை ஒன்றிணைக்கும் வணிக வழித்தடங்களை உருவாக்குகின்றன. அழிந்து வரும் வனவிலங்குகளையும், பழங்குடிச் சமூகங்களையும் பேணிப் பாதுகாக்கும் 'உயர்ந்த நாகரிகத்தின் தொட்டில்' என இதை அழைக்கலாம்.

# நீங்கள் விரும்பும் கவிஞர்

உங்களுக்குப் பலவிதமான கட்டுரைகள் எழுத வேண்டிய தேவை வரும். வெவ்வேறு தலைப்புகள் தருவார்கள். அவற்றை ஒட்டி நீங்கள் கட்டுரைகளை உருவாக்க வேண்டும்.

இங்கே ஒரு கட்டுரை எழுதிப் பார்ப்போம். தரப்பட்ட தலைப்பு, 'நான் விரும்பும் கவிஞர்' என்று வைத்துக்கொள்வோம்.

தேர்வில் கட்டுரைகள் எழுத வடிவ இலக்கணம் ஒன்று உண்டு. முன்னுரை, பொருளுரை, முடிவுரை என்பதாக ஒரு கட்டுரை அமையும். அதே பாணியில் போவோம்.

**முன்னுரை:** தமிழில் பல கவிஞர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தனிப் பாணியில் எழுதுவார்கள். எல்லோருமே நன்றாக எழுதக் கூடியவர்கள்தான். அப்படி சிறப்பாக எழுதியதால்தான் அவர்கள் கவிதைத் துறையில் பிரபலமான கவிஞர்களாக ஆக முடிந்தது.



அவர்களுள் எவரேனும் ஒருவரைக் குறித்து எழுத வேண்டும் எனும்போது என் மனத்தில் தோன்றும் முதல் பெயர்: கவிஞர் கண்ணதாசன்.

**பொருளுரை:**

திரைப்படப் பாடல்கள் எழுதிப் பிரபலமான கண்ணதாசன், தனிப்பட்ட கவிதைகளும் எழுதியிருக்கிறார். அவரது தனிக் கவிதைகள் 'கண்ணதாசன் கவிதைகள்' என்ற தலைப்பில் ஆறு தொகை நூல்கள் வெளியாகியுள்ளன. அவற்றைப் படிக்கப் படிக்க வாசகரான நம் மனத்தில் இன்பம் பெருகும்.

எல்லாப் பாடுபொருள்களிலும் எழுதியுள்ளார். நாட்டுத் தலைவர்களைப் பற்றி எழுதியுள்ளார். காமராசர் குறித்து, 'ஆண்டி கையில் கூடத் திருவோடு இருக்கும். அதுகூட உனக்கில்லையே' என்கிறார்.

*முயற்சி திருவினையாக்கும்*
*முயற்றின்மை*
*இன்மை புகுத்தி விடும்*

என்ற குறளை ஒட்டி,

*நினைத்தவுடன் அத்தனையும் நேரில்*
*கிடைக்குமெனில்*
*முயற்சிஎனும் ஒன்றை நீ முழுவதும்*
*மறந்திருப்பாய்*

என, கண்ணதாசன் எழுதுவது சிந்திக்கத்தக்கது.

தன் கவிதையைப் பற்றியே கவிஞர் கூறுவதும் ரசிக்கத்தக்கதே.

*கவிஞன் யானோர் காலக் கணிதம்*
*கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!*
*புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்*
*பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்*
*தன் கவிதை பொன்னைவிட உயர்ந்தது*

என்று அவர் சொல்லும் பாங்கு வியக்க வைக்கிறது.

எப்படிப்பட்ட கவிஞராக இருந்தாலும், அவர் வாழும் காலத்திலேயே பெருமை கிடைக்காது. மறைந்த பிறகே கிடைக்கும் என்பதை,

*வாழைஇலை தண்டுமலர்*
*காய்கனிகள் ஆனவுடன்*
*வாழையடி வாழை ஒன்று*
*ஜனனம்...அது*
*வந்தவுடன்*
*தாய் விழுந்து மரணம்*
*ஒன்று மட்டும் உண்மை*
*அறிவூற்றிலொரு பாட்டெழுதும்*
*செந்தமிழ் மகாகவிக்கு மரணம் அது*
*வந்தபின்புதான் பெருமை ஜனனம்*

என்று அவர் குறிப்பிடுவது இரங்கற்குரியது.

**முடிவுரை:** கவிஞர் கண்ணதாசனின் கவிதைகள் இன்னும் பல காலத்துக்கு நிற்கும். அவரே என் உள்ளங் கவர்ந்த கவிஞர்.

## தமிழறிஞர் செந்தமிழ் அந்தணர் காலக்கோடு

நீண்ட நெடுங்காலம் தமிழ் மொழிக்குப் பங்களித்த தமிழறிஞர், புலவர் இரா. இளங்குமரனார். செந்தமிழ் அந்தணர் என்னும் பட்டப் பெயரில் பரவலாக அறியப்பட்டவர்.

பள்ளி ஆசிரியராகத் தன் பணியைத் தொடங்கினார். பின்னர் நூலாசிரியர், பாவலர், பதிப்பாசிரியர், உரையாசிரியர், தொகுப்பாசிரியர், இதழாசிரியர், உரையாளர் எனப் பல விதமான தமிழ்ப் பணிகளைச் செய்தார்.

இவரது வாழ்வின் காலக்கோட்டை இங்கே காணலாம்.

**30 ஜனவரி 1927 :** பிறப்பு. வாழவந்தாள்புரம், நெல்லை மாவட்டம்.

**8 ஏப்ரல் 1946 :** ஆசிரியர் பணி ஏற்பு

**1951 :** புலவர் தேர்வில் முதல் வகுப்புத் தேர்ச்சி.

**1958 :** குண்டலகேசி குறித்த காவியம், மதுரையில் அரங்கேற்றம்.

**1963 :** திருக்குறள் கட்டுரைத் தொகுப்பு, வெளியிட்டவர் : நேரு.

**1978 :** நல்லாசிரியர் விருது.

**1991 :** செந்தமிழ் அந்தணர் விருது பெற்றார்.

**2000 :** கம்பன் கழகம் சார்பில் கம்பர் விருது.

**2003 :** இலக்கிய வரிசையில் புறநானூறு நூல், வெளியிட்டவர்: அப்துல் கலாம்.

**2004 :** மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் வழங்கிய தமிழ்ச் செம்மல் விருது.

**2006 :** நான்கு நூல்கள் வெளியிட்டார்.



**2021 ஜூலை 25 :** மறைவு, மதுரை திருமங்கலத்தில்.

**2021 டிசம்பர் 8 :** இளங்குமரனாரின் நூல்களைத் தமிழ்நாடு அரசு நாட்டுடைமை ஆக்கியது.

தமிழ் வழிக் கல்வியைக் குறித்துப் பேசுவதிலும், குறளின் பெருமையைப் பரப்புவதிலும் தன் வாழ்நாளைச் செலவிட்டவர் புலவர் இளங்குமரனார். திருச்சிக்கு அருகில் உள்ள அல்லூர் என்னும் சிற்றூரில் திருவள்ளுவர் தவச்சாலை ஒன்றை அமைத்தார்.

## நீங்களும் பாட்டு எழுதுங்கள்

சிறுவர்களுக்காகப் பாடல்களும் கதைகளும் ஏராளமாக எழுதிய அழ.வள்ளியப்பா எழுதிய பாடல்களில் ஒன்று இது. ஆரம்பப் பள்ளியில் கற்றுக்கொடுத்த ஆசிரியரைப் பற்றி அழகாக எழுதி இருக்கிறார். படித்துப் பாருங்கள்.

'அ' 'ஆ' எனக்குச்
சொல்லித் தந்த
ஆசிரியர், நல்ல ஆசிரியர்.
அப்பா வுக்கும்
கற்றுக் கொடுத்த
ஆசிரியர், நல்ல ஆசிரியர்.
'அ' 'ஆ' எனக்குச்
சொல்லித் தந்த
ஆசிரியர், நல்ல ஆசிரியர்.
அம்மா வுக்கும்
கற்றுக் கொடுத்த
ஆசிரியர், நல்ல ஆசிரியர்.
எத்தனை பேர்கள்
எழுதப் படிக்க
இவரிடம் கற்றுக் கொண்டனரோ!
அத்தனை பேரும் அன்புடன் மதிக்கும்
ஆசிரியர், நல்ல ஆசிரியர்.



படிச்சுட்டீங்களா... இப்போது, உங்கள் தமிழ் ஆசிரியரைப் பற்றியோ, வேறு ஆசிரியர்களைப் பற்றியோ இதே மாதிரி ஒரு பாட்டு எழுதிப் பாருங்களேன்.

## விளையாட்டு!

# நகரத்தை அளக்கும் சாகசக் கலை!

ஹாலிவுட் நடிகர் ஜாக்கிசான் படங்களில், ஒரு கட்டடத்தில் இருந்து மறு கட்டடத்துக்குத் தாவுவது, குச்சிகளைப் பற்றிக்கொண்டு சுழல்வது போன்ற காட்சிகளைப் பார்த்திருப்பீர்கள். அதுபோன்ற ஒரு சாகச விளையாட்டு தான், பார்க்கர் *(Parkour)*.

*'Parcours du combat'* என்ற பிரெஞ்சு மொழியில் இருந்து வந்தது தான் பார்க்கர். இதற்கு, 'தடைகளைத் தாண்டுதல்' என்று பொருள். பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ராணுவ வீரரும், தீத் தடுப்புப் பணியாளருமான, ரேமண்ட் பெல்லே *(Raymond Belle)* என்பவர், இந்த விளையாட்டை உருவாக்கினார். 1980இல், அவரது மகனான டேவிட் பெல்லே இதைப் பிரபலப்படுத்தினார்.

இந்த விளையாட்டு, இயற்கையான சூழலில் அல்லது நகரச் சூழலில், மிகவும் விரைவான மற்றும் திறமையான வழியில், ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்திற்குச் செல்வதை மையமாகக் கொண்டுள்ளது.

**விளையாட்டின் முக்கிய அம்சங்கள்:**

**பொதுவான அசைவுகள்:** ஓடுவது, குதிப்பது, தாவுவது, ஏறுவது.

**தடையைத் தாண்டுதல்:** இதில் ஓடுபவர், போட்டி இலக்கை நோக்கி, வழியில் உள்ள எந்தவொரு தடையையும் (சுவர்கள், வேலிகள், இடைவெளிகள், உயரமான இடங்கள்) தாவி, ஏறி, உருண்டு அல்லது பாய்ந்து கடந்து செல்ல வேண்டும்.

**திறமையான இயக்கம்:** இலக்கை அடைவதற்கு அதிகபட்ச வேகத்துடனும், குறைந்த முயற்சியுடனும், தடைகளைத் திறமையாகக் கடப்பதே இதன் முக்கிய குறிக்கோள்.

**உபகரணங்கள் இல்லை:** இந்த விளையாட்டில், கயிறு, ஏணி போன்ற எந்தத் துணை சாதனங்களும் தேவையில்லை. உடலின் வலிமை, சுறுசுறுப்பு மற்றும் மனத்திறன் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

**விதிமுறைகள்:** கையுறைகள், காலுறைகளை அணிய வேண்டும். முறையான பயிற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும். எந்தவிதப் பொருட்களுக்கோ, கட்டுமானங்களுக்கோ, சுற்றுச்சூழலுக்கோ, மற்றவர்களுக்கோ இடைஞ்சல் தரக்கூடாது. கை, கால்களை ஊன்றி, அதன்மூலம் கிடைக்கும் உந்து விசையால் மட்டுமே தடைகளைக் கடக்க வேண்டும்.

**முன் ஏற்பாடு:** விளையாட்டுக்கு முன்பாக, தயார் நிலை அசைவுகளை *(Warmup)* மேற்கொள்வது அவசியம்.

**வெற்றி நிர்ணயம்:** மிகக் குறைந்த நேரத்தில் தடையைத் தாண்டி இலக்கை அடைபவர் அல்லது பெரிய அளவிலான தடைகளைக் கடப்பவர் வெற்றியாளராக அறிவிக்கப்படுவார்.



### பிரபல வீரர்கள்!



இந்தியாவில், ஜெஸ்வின் ஆல்ட்ரின் *[Jeswin Aldrin]* என்ற வீரரும், மயூகா ஜானி *[Mayookha Johny]* என்ற வீராங்கனையும், பார்க்கர் விளையாட்டில் கைத்தேர்ந்தவர்கள்.



**உலகளாவிய போட்டிகள்:**

**ரெட் புல் ஆர்ட் ஆப் மோஷன்:** இது, உலகின் மிகப் பிரபலமான, பார்க்கர் விளையாட்டை உள்ளடக்கிய, ப்ரீ ரன்னிங் போட்டிகளில் ஒன்று. பெரும்பாலும் மிகவும் சவாலான நகர்ப்புற இடங்களில் நடத்தப்பட்டு, சிறந்த ப்ரீஸ்டைல் திறமைகளை மதிப்பிடுகிறது.

**பெஸ்டிவல் இன்டர்நேஷனல் தேஸ் ஸ்போர்ட்ஸ் எக்ஸ்ட்ரீம் (FISE):** இந்தப் பெரிய சாகச விளையாட்டுத் திருவிழாவில், பார்க்கர் பிரிவுகளும் நடத்தப்படுகின்றன.

**பார்க்கர்/ப்ரீ ரன்னிங் வேறுபாடு!**

பார்க்கர் விளையாட்டு, ப்ரீ ரன்னிங் விளையாட்டுடன் குழப்பப்படுகிறது. ஆனால், அவற்றின் அடிப்படைகள் வெவ்வேறு. பார்க்கர், தடைகளைக் கடப்பதில் உள்ள திறனைப் பற்றியது. ப்ரீ ரன்னிங், தடைகளைக் கடப்பதில், அக்ரோபாட்டிக்ஸ் மற்றும் ஸ்டைல்களைச் சேர்ப்பது.

**–ஜி.வி.ரிதன்யா**



### இந்தியாவில் உள்ளதா?

இந்தியாவில், 2000ஆம் ஆண்டில், பார்க்கர் விளையாட்டு பிரபலமானது. தற்போது, பெங்களூரு, மும்பை, டில்லி ஆகிய நகரங்களில் பல குழுக்கள், இதை ஆதரிக்கும் விதமாகத் தோன்றிச் செயல்பட்டு வருகின்றன.

பார்க்கர் இந்தியா என்ற அமைப்பும், அர்பன் மங்கீஸ் என்ற அமைப்பும், இந்த விளையாட்டுக்கான பயிற்சிகளை அளிப்பதில் குறிப்பிடத்தக்கவை. இணைய வழிப் பயிற்சியையும், சில அமைப்புகள் வழங்குகின்றன.

---

## உடற்பயிற்சி!

# வயிற்றுக்கு வலிமை, உடலுக்கு உறுதி!

வயிற்றுப் பகுதியையும், அடிவயிற்று தசைகளையும் இலக்காகக் கொண்ட ஒரு சிறந்த உடற்பயிற்சி தான், ஃப்ளட்டர் கிக்ஸ் *(Flutter Kicks)*. இது, வலிமையான மைய உடற்பகுதிக்கு உதவுவதோடு, இடுப்பு நெகிழ்வுத் தசைகளையும் வலுப்படுத்துகிறது.

**செய்வது எப்படி?**

**நிலை 1:**

தரையில் மல்லாக்கப் படுக்க வேண்டும். கைகளை, உடலின் பக்கவாட்டில் வைக்கலாம் அல்லது தலைக்கு அடியில் வைத்துக் கொள்ளுங்கள். முதுகுத் தண்டு நேராகவும், தரையில் அழுத்தமாகவும் இருக்க வேண்டும்.

**நிலை 2:**


கால்களைத் தரையிலிருந்து, 6 அங்குலங்கள் உயர்த்தி, நேராக நீட்ட வேண்டும். முதலில், வலது காலை மேலும் 6 அங்குலங்கள் மேலே உயர்த்த வேண்டும். பிறகு, இடது காலை மெதுவாகக் கீழே இறக்கி, தரையிலிருந்து 3 அங்குலங்களில் நிறுத்த வேண்டும்.

**நிலை 3:**

இப்போது, உடலின் மையப்பகுதியைப் பயன்படுத்தி, கால்களை இடம் மாற்றுங்கள். அதாவது, வலது காலைக் கீழே இறக்கி, இடது காலை மேலே உயர்த்துங்கள். இந்த மாற்று அசைவை, நீச்சலில் உதைப்பது போல, சீரான வேகத்தில் செய்யுங்கள்.

**நன்மைகள்:**

- அடிவயிற்றுப் பகுதியில் உள்ள தசைகளை வலிமையாக்கப் பயனுள்ளதாக இருக்கும்.
- உடற்பகுதி சமநிலையையும் நிலைத்தன்மையையும் மேம்படுத்தும்.
- இடுப்புக்கு முன்புறம் உள்ள தசைகளை வலிமையாக்கும்.
- பயிற்சியைத் தவறாமல் செய்வதன் மூலம், சிறந்த பலன்களைப் பெறலாம்.




**கவனிக்க**

- முதுகுத் தண்டு தரையில் அழுத்தி இருக்க வேண்டும்.
- முதுகு வளைந்தாலோ, வலி ஏற்பட்டாலோ, கால்களைத் தரையிலிருந்து அதிகமாக உயர்த்த வேண்டாம்.
- கால்களை உதைக்கும்போது, சீராக மூச்சுவிட வேண்டும்.
- எந்த ஓர் உடற்பயிற்சியைச் செய்வதற்கு முன்பும், நிபுணரின் ஆலோசனையைக் கேட்டுச் செய்வது நல்லது.

# 8.2 சதவீதம் வளர்ந்த இந்தியப் பொருளாதாரம்

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அளவிடும் முக்கிய குறியீடு, ஒவ்வோர் காலாண்டும் வெளியிடப்படும். இதனை 'மொத்த உள்நாட்டு உற்பத்தி' *(Gross Domestic Product –* ஜி.டி.பி.) என்று அழைப்பர்.

அந்த வகையில், இந்த 2025–26 நிதியாண்டின் இரண்டாவது காலாண்டில் (அதாவது ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில்), இந்தியாவின் ஜி.டி.பி. வளர்ச்சி 8.2 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது ஒரு மிகப் பெரிய வளர்ச்சியாகப் பார்க்கப்படுகிறது. பொருளாதார வல்லுநர்களும், இந்திய ரிசர்வ் வங்கியும் (RBI) முன்னர் வெளியிட்ட அனைத்துக் கணிப்புகளையும் விட, இந்த வளர்ச்சி விகிதம் அதிகமாகும்.




கடந்த ஆறு காலாண்டுகளில் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ள இந்த ஜி.டி.பி. வேகம், இந்த ஆண்டு முழுமைக்குமான வளர்ச்சியையும் உயர்த்தும். அதாவது, இந்த நிதியாண்டில், நமது நாட்டின் ஜி.டி.பி. வளர்ச்சி 7 சதவீதத்தை விட அதிகமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், 'உலகின் வேகமாக வளரும் பெரிய பொருளாதாரம்' என்ற அடையாளத்தை இந்தியா தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டுள்ளது.

**அமெரிக்காவின் கெடுபிடி**

இதில் சுவாரசியம் என்னவென்றால், அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், இந்தியப் பொருட்களின் மீது 50 சதவீதம் அளவுக்கு இறக்குமதி வரியை *(Tariff)* விதித்துள்ளார். இதனால், அமெரிக்காவுக்கான நமது ஏற்றுமதியின் அளவு கணிசமாகக் குறைந்தது. இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகப் பேச்சுவார்த்தையும் இன்னும் முடிவுக்கு வரவில்லை. இப்படிப்பட்ட நெருக்கடிக்கு இடையிலும், நமது பொருளாதாரம் வேகமாக வளர்ந்துள்ளது உலகப் பொருளாதார அறிஞர்களை ஆச்சரியப்படுத்தியுள்ளது.

**காரணங்கள் என்ன?**

வெளிநாட்டு வர்த்தகம் குறைந்தாலும், வளர்ச்சி குறையாமல் இருக்க மூன்று முக்கிய காரணங்கள் உள்ளன:

- **உள்நாட்டு நுகர்வு:** இந்திய மக்கள் பொருட்களை வாங்கும் திறன் *(Domestic Consumption)* வெகுவாகப் பெருகியுள்ளது.
- **வரிச் சலுகை:** வருமான வரி குறைப்புகள் மக்களிடம் பணப்புழக்கத்தை அதிகரித்துள்ளன.
- **ஜி.எஸ்.டி. சீர்திருத்தம்:** ஜி.எஸ்.டி *(GST)* விகிதத்தில் ஏற்பட்டுள்ள பெரிய மாற்றங்கள் வணிகத்தை எளிதாக்கி, அதன் வாயிலாக ஜி.டி.பி.யையும் உயர்த்தியுள்ளன.

## ஜி.டி.பி. என்றால் என்ன?

ஓராண்டில், நம் நாட்டு எல்லைக்குள் ஊசி முதல் ராக்கெட் வரை உற்பத்தி செய்யப்பட்ட அனைத்துப் பொருட்கள் மற்றும் சேவைகளின் [டாக்டர், டீச்சர், ஐடி வேலை] மொத்த மதிப்புதான் ஜி.டி.பி. இதுதான் நாட்டின் 'மார்க் ஷீட்.'



**நிதியாண்டு** (Financial Year):




உங்கள் பள்ளி ஆண்டு ஜூன் மாதம் தொடங்கும். காலண்டர் ஜனவரியில் தொடங்கும். ஆனால், அரசின் கணக்கு வழக்குகள் [பட்ஜெட்] எப்போதும் ஏப்ரல் 1இல் தொடங்கி மார்ச் 31இல் முடியும். இதைத்தான் 'நிதியாண்டு' [Fiscal Year] என்கிறோம்.

**காலாண்டு (Quarter) என்றால் என்ன?**

ஓராண்டில் 12 மாதங்கள். அதை நான்காகப் பிரித்தால் 3 மாதங்கள். அதுதான் காலாண்டு.

- **Q1: ஏப்ரல் – ஜூன்**
- **Q2: ஜூலை – செப்டம்பர் (இப்போது நாம் பார்த்தது).**
- **Q3: அக்டோபர் – டிசம்பர்.**
- **Q4: ஜனவரி – மார்ச்.**

**ஏன் அமெரிக்கா வரி போட்டாலும் இந்தியா தப்பித்தது?**

ஏனென்றால், நாம் தயாரிக்கும் சோப்பு, பேஸ்ட், கார், பைக் எனப் பெரும்பாலானவற்றை வெளிநாட்டிற்கு விற்காமல், நம் மக்களே வாங்கிக் கொள்கிறோம். 140 கோடி மக்கள் இருக்கும்வரை, நமது வணிகத்துக்கு எல்லையே இல்லை.

## பேசும் எண்கள்

1. **மொத்த வளர்ச்சி:** நமது நாட்டின் ஜி.டி.பி. வளர்ச்சி அபாரமான வேகத்தில் உயர்ந்துள்ளது.

- **கடந்த ஆண்டு:** 2024–25 நிதியாண்டின் இரண்டாம் காலாண்டில் வளர்ச்சி வெறும் 5.6 சதவீதமாக இருந்தது.
- **இந்த ஆண்டு:** 2025–26 நிதியாண்டின் அதே இரண்டாம் காலாண்டில், அது 8.2 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது ஒரு மாபெரும் பாய்ச்சலாகும்.
- முன்னதாக, இந்த நிதியாண்டின் முதல் காலாண்டிலேயே வளர்ச்சி 7.8 சதவீதத்தை எட்டியிருந்தது கவனிக்கத்தக்கது.

2. **அரையாண்டு கணக்கீடு:** நிதியாண்டின் முதல் பாதியை [ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை] கணக்கிட்டால்:


- கடந்த 2024–25 நிதியாண்டில் இது 6.1 சதவீதமாக இருந்தது.
- ஆனால், நடப்பு 2025–26 நிதியாண்டில் இது 8.0 சதவீதமாக உயர்ந்துள்ளது.

3. **துறை வாரியான வளர்ச்சி:** இந்தக் காலாண்டில் ஒவ்வொரு துறையும் எட்டியுள்ள வளர்ச்சி விகிதங்கள்:

- **சேவை மற்றும் நிதி:** வங்கி, ரியல் எஸ்டேட் மற்றும் தொழில்முறை சேவைகள் துறை அதிகபட்சமாக 10.2 சதவீதம் வளர்ந்துள்ளது.
- **தொழிற்சாலைகள்:** உற்பத்தித் துறை 9.1 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது.
- **கட்டுமானம்:** கட்டடங்கள் மற்றும் உள்கட்டமைப்புத் துறை 7.2 சதவீதம் வளர்ச்சி அடைந்துள்ளது.
- **பயன்பாட்டுச் சேவைகள்:** மின்சாரம், எரிவாயு, நீர் வழங்கல் போன்றவை 4.4 சதவீதம் வளர்ந்துள்ளன.
- **விவசாயம்:** விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகள் 3.5 சதவீதம் என்ற அளவில் மிதமான வளர்ச்சியைக் கண்டுள்ளன.

**எதிர்பார்ப்பு என்ன?**

பெரும்பாலான பொருளாதார வல்லுநர்கள், முழு நிதியாண்டிற்கான இந்தியாவின் ஜி.டி.பி. வளர்ச்சி 7 சதவீதத்தை விட அதிகமாக இருக்கும் என்று உறுதியாகக் கருதுகின்றனர். இது இந்திய ரிசர்வ் வங்கி [6.8 சதவீதம்] மற்றும் சர்வதேச நாணய நிதியம் [6.6 சதவீதம்] ஆகிய அமைப்புகள் முன்பு கணித்ததை விட மிக அதிகமாகும்.



**செய்தி:** இந்தியாவில் 2030 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் நடக்கவுள்ளன.

# 2030 காமன்வெல்த் போட்டிகள் தரும் அரிய வாய்ப்பு

வரும் 2030ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் வாய்ப்பு இந்தியாவிற்குக் கிடைத்திருக்கிறது. இது வெறும் விளையாட்டு நிகழ்வு மட்டுமல்ல. உலக அரங்கில் நாட்டின் பிம்பத்தை உயர்த்தக் கிடைத்த பொன்னான வாய்ப்பு.

டில்லியில் 2010இல் நடந்த காமன்வெல்த் போட்டிக்கான ஏற்பாடுகள் சர்ச்சைக்குரியதாக ஆனது. ஆனால், இழந்த நற்பெயரை மீட்டெடுக்கும் வாய்ப்பு, இருபது ஆண்டுகள் கழித்து, அகமதாபாத் நகருக்குக் கிடைத்துள்ளது.

இத்தகைய போட்டிகள் நடக்கும் நாட்டில், பொது உள்கட்டமைப்பு, விளையாட்டு மைதானங்கள் மற்றும் தடகள வீரர்களுக்கான நிதி போன்றவற்றில் பெரும் முதலீடுகளைக் குவியும். இது காமன்வெல்த் மட்டுமல்லாது, எதிர்கால ஒலிம்பிக் போட்டிகளிலும் இந்தியாவின் ஒட்டுமொத்த விளையாட்டுத் திறனை மேம்படுத்த உதவும்.

பதக்கங்களுக்கும் மைதானங்களுக்கும் அப்பால், இந்தப் போட்டிகளை வெற்றிகரமாக நடத்துவது, இந்தியாவை நம்பகமான உலகளாவிய விளையாட்டு மையமாக மீண்டும் நிலைநிறுத்தும்.

டில்லியில் நடந்த காமன்வெல்த் போட்டிகள், ஊழல் குற்றச்சாட்டுகள், மோசமான திட்டமிடல் மற்றும் தாமதமான கட்டுமானங்களால் பாதிக்கப்பட்டன. இந்த முறை, கடந்த தவறுகளிலிருந்து கற்றுக்கொள்வதாகவும், எந்தவிதமான சர்ச்சைகளும் இன்றி நேர்மையாக நடத்தப்படும் என்றும் அதிகாரிகள் உறுதியளிக்கின்றனர்.

ஆயினும், வெற்றியானது தொடக்க விழாவுக்கு முன்பே உறுதி செய்யப்பட வேண்டும். மைதானங்களை இறுதி செய்வது, போதுமான தங்குமிடம், போக்குவரத்து, உணவு, குடிநீர் போன்றவற்றை நிர்வகிப்பது ஆகியவை முன்னேற்பாடுகள் இந்தியாவின் மேலாண்மைத் திறனைச் சோதிக்கும்.



அகமதாபாத் இந்தச் சோதனையில் வெற்றி பெற்றால், 2030 போட்டிகள் உலகளாவிய விளையாட்டு நிகழ்வுகளுக்கான நம்பகமான, நவீன நாடு என்ற இந்தியாவின் புதிய அத்தியாயத்தைத் தொடங்கி வைக்கும்.

**செய்தி:** விதைகள் திருத்த மசோதா 2025 அறிமுகம்.

# 'விதை மசோதா 2025' என்ன சொல்கிறது?

மத்திய அரசு அண்மையில், விதை மசோதா 2025ஐ முன்மொழிந்துள்ளது. ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இருந்த விதை சார்ந்த விதிகளை மாற்றி, நவீன அறிவியல், உயிரி தொழில்நுட்பம் மற்றும் கலப்பின விதைகள் ஆகியவற்றை, இந்தியாவின் விதைச் சந்தையோடு சேர்க்கும் வகையில், புதிய சட்டம் கொண்டு வரப்படுகிறது.

இதன் முக்கிய நோக்கம், விவசாயிகளுக்கு உயர்தரமான விதைகளை, விரைவில் கிடைக்கச் செய்வதும், விதை உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள் போன்றோரின் பொறுப்புகளை வரையறுப்பதும்தான்.

மசோதாவின் கீழ், விதைகளை தேசிய அளவில் மேற்பார்வையிட ஒரு மத்திய விதைக் குழுவும், உள்ளூர் பதிவுகளைக் கையாள பல மாநில விதைக் குழுக்களும் என இரட்டை அடுக்கு ஒழுங்குமுறை அமைப்பு உருவாக்கப்படும். அனைத்து விதை ரகங்களும் முளைப்புத் திறன், மரபணுத் தூய்மை மற்றும் விளைச்சல் ஆகியவற்றிற்கான சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு தேசியப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

விவசாயிகளுக்கான ஒரு பாதுகாப்பு அம்சம், இதில் நீடிக்கிறது. விவசாயிகள் தாங்கள் விளைவித்த விதைகளைத் தொடர்ந்து சேமிக்கவும், பயன்படுத்தவும், பரிமாற்றம் செய்யவும் அல்லது விற்கவும் முடியும். ஆனால், அவற்றை வணிக முத்திரையின் கீழ் விற்கக் கூடாது.

இருப்பினும், இந்தச் சீர்திருத்தம் சில கவலைகளையும் எழுப்பியுள்ளது. சில விவசாயச் சங்கங்கள், இந்த மசோதா பெருநிறுவனங்களுக்குச் சாதகமாக இருப்பதாகவும், விதிகள் மத்திய மயமாக்கப்படுவதால், பாரம்பரிய விதை உரிமைகள் மற்றும் பல்லுயிர்த் தன்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்றும் வாதிடுகின்றனர்.




இந்தச் சட்டம், நவீன ஒழுங்குமுறைக்கும் பாரம்பரிய உரிமைகளுக்கும் இடையில் சமநிலையை எப்படிக் கொண்டுவரும் என்பதைப் பொறுத்தே இதன் தாக்கம் அமையும்.

**செய்தி:** வீழ்ந்திருந்த கணினிகள் விற்பனை அதிகரிப்பு.


# மீண்டும் சூடுபிடிக்கும் கணினி விற்பனை

மடிக்கணினிகள், மேஜைக் கணினிகள் மற்றும் டேப்லெட்டுகளுக்கான நுகர்வோர் தேவை, திடீரென அதிகரித்துள்ளது. கடந்த 2025 செப்டம்பரோடு முடிந்த காலாண்டில், மொத்தம் 41 லட்சத்திற்கும் அதிகமான கணினிகள் விற்பனையாகியுள்ளன. இது ஒரு புதிய சாதனை அளவு விற்பனை என்கிறது ஒரு தொழில்துறை ஆய்வறிக்கை.

கொரோனா பெருந்தொற்றுக் காலத்திற்குப் பிறகு, மந்தமாக இருந்த கணினிச் சந்தை, தற்போது வெகுவாகச் சுறுசுறுப்படைந்துள்ளது. இதற்கு மூன்று காரணங்கள் உள்ளன.

முதலாவது, கணினிகளுக்கான பண்டிகைக் காலச் சலுகைகள், நுகர்வோரையும் மாணவர்களையும் வெகுவாகக் கவர்ந்துள்ளன.

இரண்டாவது, பெருந்தொற்றுக்கால பொருளாதார அச்சங்களைக் கடந்துவிட்ட அலுவலகங்கள், பழைய கணினிகளுக்கு மாற்றாக, 'வொர்க்ஸ்டேஷன்' வகை கணினிகளைப் பெருமளவு வாங்கத் தொடங்கியுள்ளன.



மூன்றாவது காரணம், ஏ.ஐ. சாட்பாட்டுகள் பரவலான ஆண்டு 2025தான். ஏ.ஐ.யை அதிகம் பயன்படுத்துவோர் புதிய கணினிகளை வாங்கியுள்ளனர்.

சந்தை வளர்ச்சியில் அனைத்து நிறுவனங்களும் சமமாகப் பயனடையவில்லை. இந்தியாவில் நீண்டகாலமாக மிகப்பெரிய கணினி விற்பனையாளராக இருந்த ஒரு நிறுவனத்தின் விற்பனை 10 சதவீதம் சரிந்தது. அதே சமயம், பின்னாலிருந்த நிறுவனம் 14 சதவீத வளர்ச்சி கண்டது.

முக்கியமாக, 'கேமிங்' வகை கணினிகளை விற்கும் ஒரு நிறுவனம், இரண்டாவது பெரிய விற்பனை கண்ட நிறுவனமாக முன்னேறியுள்ளது. இந்த வளர்ச்சி, விலை உயர்ந்த கணினிகளை விட, குறைந்த மற்றும் நடுத்தர விலை மாடல்களைக் கொண்டே சாத்தியமானது.

இதன் தொடர்விளைவாக, பெரிய நிறுவனங்கள், சக்திவாய்ந்த கணினிகளை வாங்குவார்கள் என எதிர்பார்க்கலாம்.



# எப்படி ஜெயித்தார் சிந்தரோவ்?



வெய் யி

ஒரு மாத காலமாகக் கோவாவில் நடந்துவந்த உலகக் கோப்பை சதுரங்கப் போட்டி, கடந்த 27ஆம் தேதி முடிவடைந்தது. 19 வயதான உஸ்பெகிஸ்தான் வீரர் 'ஜாவோகிர் சிந்தரோவ்' *(Javokhir Sindarov)* முதல் இடம் பிடித்தார். சீனாவின் வெய் யி *(Wei Yi)* உடன், இவர் விளையாடிய இறுதிச் சுற்று, மிகவும் விறுவிறுப்பாக அமைந்தது.

### விறுவிறுப்பான ஆட்டங்கள்

கிளாசிக்கல் *(Classical)* முறையில் நடைபெற்ற முதல் இரண்டு ஆட்டங்களும் சமநிலையில் *(Draw)* முடிந்தன. இதனால், வெற்றியாளரைத் தீர்மானிக்க, போட்டி 'டை–பிரேக்கர்' *(Tie–breaker)* சுற்றுக்குச் சென்றது.

15 நிமிடங்கள் அடங்கிய ரேபிட் *(Rapid)* முறையில் டை–பிரேக்கர் சுற்று நடத்தப்பட்டது.

முதல் டை–பிரேக் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

இரண்டாவது ஆட்டத்தில் கறுப்பு நிறக் காய்களுடன் விளையாடினார் சிந்தரோவ்.

சீனாவின் வெய் யி, படம் 1இல் காட்டியபடி, கிங்ஸ் பான் ஓபனிங் *(King's Pawn Opening)* நகர்வை மேற்கொண்டார். பதிலுக்குச் சிந்தரோவும் அதே நகர்வைச் செய்தார்.



படம் 1

ஆட்டத்தின் 52வது நகர்வில், படம்2இல் உள்ளபடி, சிப்பாயை எதற்காக வெய் யி முன்னே நகர்த்தினார் என்று தெரியவில்லை. நேரமின்மையால் அப்படிச் செய்தாரா என்பது கேள்வியாக உள்ளது!

அதுதான் சிந்தரோவுக்கு ஆட்டம் சாதகமாக அமைந்தத் தருணம்.

### வெற்றியின் முக்கியத்துவம்

- இந்த வெற்றியின் மூலம், உலகக் கோப்பையை வென்ற முதல் உஸ்பெகிஸ்தான் வீரர் என்ற பெருமையை சிந்தரோவ் பெற்றார்.
- ஏற்கெனவே, செஸ் ஒலிம்பியாட் போட்டிகளில் உஸ்பெகிஸ்தான் அணியின் தூணாக விளங்கிய இவர், இந்த வெற்றியின் மூலம் தன்னை உலகின் மிகச்சிறந்த வீரர்களில் ஒருவராக நிலைநிறுத்தியுள்ளார்.
- இந்த வெற்றியின் மூலம், விஸ்வநாதன் ஆனந்த் கோப்பையும், 1.2 லட்சம் அமெரிக்க டாலர் [~1 கோடி 7 லட்சம்] பரிசுத் தொகையும் இவருக்குக் கிடைத்துள்ளது.
- அதோடு, அடுத்த ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரலில் நடக்கவிருக்கும் கேண்டிடேட்ஸ் போட்டியில் *[Candidates Tournament]* கலந்துகொண்டு விளையாடும் வாய்ப்பும் கிடைத்துள்ளது.



படம் 2

அடுத்த சில நகர்வுகளில், இருவரும் மாறிமாறி தங்கள் யானையையும், மந்திரியையும் வெட்டிக்கொள்ள, மறுபடியும், 57வது நகர்த்தலில் வெய் யி தவறான நகர்த்தலை மேற்கொண்டார்.

படம்3இல் காட்டியபடி, *f4*இல் இருந்த யானையை *d4*இல் வைத்து சொதப்பினார்.

அடுத்த நகர்வாக, சிந்தரோவ், தனது ராணியை *h4*இல் வைத்து, வெள்ளை ராஜாவை செக் செய்தார்.

அடுத்து ராஜா *f4* கட்டத்திற்குப் போக, கறுப்பு யானையை *e1* வைத்து, வெள்ளை ராணியை அட்டாக் செய்ய நினைத்தார் சிந்தரோவ்.



படம் 3

சுதாரித்துக்கொண்ட வெய் யி, வெள்ளை ராணியை *g2*இல் வைத்தார்.

மீண்டும் ராணியை *g5*இல் வைத்து, செக் செய்தார் சிந்தரோவ்.

வெய் யி, தனது ராஜாவை *g3* கட்டத்தில் வைத்ததும், மீண்டும் ராணியை *e3* கட்டத்தில் வைத்து, படம்4இல் உள்ளபடி செக் செய்தார் சிந்தரோவ்.

அதோடு ஆட்டத்தில் தோல்வியை ஒப்புக்கொண்டு, வெளியேறினார் வெய் யி. சிந்தரோவ் வெற்றி வாகை சூடினார்.

இந்தத் தொடரில் இந்தியாவின் குகேஷ் மற்றும் பிரக்ஞானந்தா போன்ற முன்னணி வீரர்கள் கலந்துகொண்டாலும், சிந்தரோவின் ஆக்ரோஷமான ஆட்டமும், நெருக்கடியான நேரங்களில் அவர் கையாண்ட நிதானமும், அவருக்கு இந்த மகுடத்தைப் பெற்றுத் தந்துள்ளது.



படம் 4

## டிரஸ் கோடு அறிவிப்பு!

கத்தார் நாட்டின் தோஹாவில் நடைபெற இருக்கிறது 'பிடே உலக ரேபிட் மற்றும் பிளிட்ஸ் சேம்பியம்ஷிப் போட்டி' *(FIDE World Rapid & Blitz Chess Championship)*. டிசம்பர் 25 முதல் 30 வரை நடக்கவிருக்கும் போட்டியில், நடப்பு உலகச் சாம்பியன் குகேஷ், உலகின் நம்பர் ஒன் வீரர் மேக்னஸ் கார்ல்சன் உட்பட, 360 வீரர்கள் விளையாட இருக்கின்றனர். உலகின் முன்னணி வீரர்கள் பலரும் கலந்துகொள்ளும் இந்தப் போட்டியில், தற்போது, எந்த உடைகளை வீரர்கள் அணிய வேண்டும் என்ற அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதன் முக்கியத்துவம் என்ன?

பாரம்பரியம் மற்றும் தொழில்முறைத் தரத்தை நிலைநிறுத்தும் வகையில் இந்த உடை விதிமுறைகளை அறிவித்துள்ளது பிடே!




விளையாட்டின் கௌரவம், கண்ணியம் மற்றும் நேர்மைக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் அமையும் ஆடைகள் மற்றும் விளம்பரச் சின்னங்கள் தாங்கிய டி–ஷர்ட்டுகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

'விதிமுறைகளை மீறும் வீரர்களை, போட்டியில் இருந்து நீக்கும் அதிகாரம் நடுவர்களுக்கு உண்டு. அதுமட்டுமல்லாமல், 'பரிசுத் தொகையில் 5 சதவீதம் குறைக்கப்படும்' என, பிடே தெளிவாக அறிவித்துள்ளது.

ஆண்கள், சூட், ஜீன்ஸ் பேன்ட், சாதாரண பேன்ட், ஒற்றை நிற சட்டை, செக்கர்டு அல்லது கோடிட்ட சட்டைகள், லோஃபர் அல்லது ஒற்றை நிற ஸ்னீக்கர் ஷுக்களை அணியலாம் என்றும்; பெண்கள், ஸ்கிர்ட் சூட் *(Skirt suit)*, பேன்ட் சூட், ஜீன்ஸ் பேன்ட், லோஃபர் அல்லது ஒற்றை நிற ஸ்னீக்கர் ஷுக்களை அணியலாம் என்றும் பிடே தெரிவித்துள்ளது.

தொப்பிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டு உள்ளது!